முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1404

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**03.08.2023**, வியாழக்கிழமை

1. தர்ம ராஜனே அரங்கா வாழ்க
தன்னார்வ தொண்டு உலகமெல்லாம்
பெருகிட அன்பர்கள் ஞானிகள் ஆகிட
பேரற்புதம் நடத்துகின்ற குருராஜனே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் ஞான அறிவுரை ஆசி
தாழ்வில்லா சோபகிருது நள்ளித் திங்கள்
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 18 ம் நாள், 03.08.2023, வியாழக்கிழமை)
தவசிக்கு சக்தி கூட எடுத்துரைப்பேன்
3. உரைக்கவே அரங்கனே நித்தம்நித்தம்
உலகத்தில் சக்தி ஊட்டி ஆறுமுகன்யான்
குறைவின்றி காத்து வருதலுற
கூறிடுவேன் அரங்கன் சடுதி ஆற்றல்பெருகி
4. பெருகியே எழுந்து நடக்கும் மகாசக்தி
பேருலகில் அவதார நோக்கமாக நடந்தேறும்
நடந்தேறி அரங்கன் உலகமெல்லாம் வலம்வர
ஞானிகள்படை உலகெல்லாம்பரவி ஞான ஆட்சிக்குண்டான காலமாற்றங்கள்
5. மாற்றங்கள் சடுதி ஆறுமுகன் என்னருளால்
மண்ணுலகம் கண்டு தேறக்கூடும்
கூடவே அரங்கன் திருவடி பற்றி
குவலயத்தார் ஞானம் வேண்டி வர
6. நாடெங்கும் ஞானவான்கள் நிறைந்த
ஞானிகள் வெளிப்படும் ஞானச்சித்தர் காலமாக
ஆகவே மாற்றம் கூடி அகிலம் அற்புதம் காணும்
அறிவித்த ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–